வயநாடு மறுவாழ்வுக்கு மத்திய அரசிடமிருந்து இன்னும் நிதியுதவி கிடைக்கவில்லை: முதல்வர் பினராயி விஜயன் வேதனை

திருவனந்தபுரம், ஜன. 23– வயநாடு நிலச்சரிவால் பாதிக்கப்பட்டவர்களின் மறுவாழ்வுக்கென மத்திய அரசு இதுவரை எந்த உதவியும் வழங்கவில்லை என்றும், முதல்வரின் பேரிடர் நிவாரண நிதியிலிருந்து பெறப்பட்ட ரு.712.98 கோடி, உயிர் பிழைத்தவர்களுக்கு உதவ பயன்படுத்தப்படும் என்றும் கேரள முதல்வர் பினராயி விஜயன் தெரிவித்தார்.

கேரள சட்டசபையில் கேள்வி நேரத்தின் போது, வயநாடு தொகுப்புக்காக பெறப்பட்ட தொகை குறித்து ஐக்கிய ஜனநாயக முன்னணி எம்.எல்.ஏ. குருக்கோளி மொய்தீன் எழுப்பிய கேள்விக்கு முதல்வர் பினராயி விஜயன் பதில் அளித்தார்.

அப்போது அவர் கூறியதாவது:–

வயநாடு நிலச்சரிவு மறுவாழ்வுக்காக மத்திய அரசிடம் முதலில் ரூ.2,221 கோடி மாநிலம் கோரினோம். ஆனால் பேரிடருக்குப் பின்னர் தேவைகள் மதிப்பீடு செய்த அறிக்கையின்படி, இன்னும் அதிக நிதி தேவைப்படுகிறது.

வயநாடு நிலச்சரிவை 'கடுமையான இயற்கை பேரழிவு' என மத்திய அரசு அறிவித்ததால், நாடு முழுவதும் உள்ள எம்.பி.க்கள் ரூ. 1 கோடி வரை நன்கொடை அளிக்கலாம், மேலும் உதவி கோரி நாட்டிலுள்ள அனைத்து எம்.பி.க்களுக்கும் ஏற்கனவே கடிதம் எழுதியுள்ளேன். சிஎம்டிஆர்எப்ல் பெறப்பட்ட நிதி பேரிடரில் இருந்து தப்பியவர்களின் நலனுக்காகப் பயன்படுத்தப்படும். மறுவாழ்வு செயல்முறை விரைவில் முடிக்கப்படும். ஜூலை 30 அன்று ஏற்பட்ட நிலச்சரிவில் இருந்து தப்பியவர்களுக்காக, கல்பெட்டாவில் உள்ள எல்ஸ்டோன் எஸ்டேட்டில் 58.50 ஹெக்டேர் மற்றும் வயநாடு மாவட்டத்தில் உள்ள மெப்படி பஞ்சாயத்தில் உள்ள நெடும்பலா எஸ்டேட்டில் 48.96 ஹெக்டேர் பரப்பளவில் மாதிரி டவுன்ஷிப்களை கட்டுவதற்கான மறுவாழ்வுத் திட்டத்தை அமைச்சரவை முடிவு செய்துள்ளது. மறுவாழ்வுக்காக 61 நாட்களுக்குள் நிலத்தை கையகப்படுத்த அமைச்சரவை முடிவு செய்துள்ளது. புனர்வாழ்வு திட்டத்தில் ஒரே நேரத்தில் பல வீடுகள் கட்டப்படும். வீடுகளுக்கு சுமார் ரூ.30 லட்சம் செலவாகும் என்று நாங்கள் மதிப்பிடுகிறோம்.

முன்மொழியப்பட்ட நகரத்துக்கு வெளியே தங்க விரும்பும் நபர்களுக்கு தலா ரூ.15 லட்சம் வழங்கப்படும். முன்மொழியப்பட்ட நகரில் உள்ள வீடுகளில் மறுவாழ்வு பெற, பேரிடர் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் வரைவு பட்டியலை அரசாங்கம் வெளியிட்டுள்ளது. இறுதிப் பட்டியல் விரைவில் வெளியிடப்படும் என்றார்.

பிளான் அப்ரூவல் வழங்க ரூ.20 ஆயிரம் லஞ்சம்: பரமக்குடி நகரமைப்பு அதிகாரி கைது

பரமக்குடி, ஜன. 23–

ராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி நகராட்சியில் பதிவு பெற்ற என்ஜினீயர் ஒருவர் தனது வாடிக்கையாளருக்கு சொந்தமான நான்கு மாடி வீடு கட்ட அப்ரூவல் கட்டணமாக, 76 ஆயிரத்து 850 ரூபாய் கட்டணம் செலுத்தியுள்ளார். தொடர்ந்து பிளான் அப்ரூவல் கேட்டபோது, டி.பி.ஓ., பர்குணன், தனக்கு ஒரு வீட்டு மனைக்கு தலா ரூ.5 ஆயிரம் வீதம் 20 ஆயிரம் ரூபாய் கொடுக்க வேண்டும் என கேட்டுள்ளார். தொடர்ந்து பணத்தை வழங்காத நிலையில் பைல்கள் அப்படியே கிடக்கும் என தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் என்ஜினீயர், லஞ்ச ஒழிப்பு துறையை தொடர்பு கொண்டு பேசியதின் அடிப்படையில், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு போலீசார், 20 ஆயிரம் ரூபாயை பர்குணனுக்கு, ஜிபே., மூலம் அனுப்பும்படி தெரிவித்தனர். அதன்படி, அவரும் அனுப்பியுள்ளார்.

அதனை ஆதாரமாக வைத்து 20 ஆயிரம் ரூபாய் லஞ்சம் வாங்கிய பர்குணனை, லஞ்ச ஒழிப்பு போலீஸ் இன்ஸ்பெக்டர் ராஜேஸ்வரி தலைமையிலான போலீசார் கைது செய்தனர்.

இன்று நேதாஜி சுபாஷ் சந்திரபோஸின் 129வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை காமராசர் சாலையில் அமைந்துள்ள அன்னாரது உருவச் சிலைக்குக் கீழ் வைக்கப்பட்டுள்ள உருவப்படத்திற்கு தமிழ்நாடு அரசின் சார்பில் அமைச்சர்கள் அனிதா ராதாகிருஷ்ணன், மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு, சட்டமன்ற உறுப்பினர்கள் த.வேலு, ஆர்.மூர்த்தி, பிரபாகரராஜா, மேயர் ஆர்.பிரியா, துணை மேயர் மகேஷ்குமார், அரசு செயலாளர் வே.ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குனர் இரா. வைத்தியநாதன், கூடுதல் இயக்குனர் ச.செல்வராஜ் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

தமிழ் நிலப்பரப்பில் இருந்துதான் இரும்பின் காலம்...

(1–ம் பக்கத் தொடர்ச்சி)

மாநிலத்தில் இருக்கும் பீட்டா ஆய்வகத்துக்கும் – மாதிரிகள், பகுப்பாய்வுக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

3 நிறுவனங்கள் பகுப்பாய்வு

தேசிய நிறுவனங்களில் OSL பகுப்பாய்வுக்கும், பீட்டா ஆய்வகத்தில் கதிரியக்க காலப் பகுப்பாய்வுக்கும் ஒரே தாழியிலிருந்து மாதிரிகளை அனுப்பி வைத்தோம். இப்படியான மூன்று நிறுவனங்களிடம் இருந்தும் ஒரே மாதிரியான பகுப்பாய்வு முடிவுகள் பெறப்பட்டிருக்கிறது.

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை பல்வேறு ஆய்வு நிறுவனங்களுக்கு மாதிரிகளை அனுப்பி பெறப்பட்ட முடிவுகளை, கூர்ந்து ஒப்பாய்வு செய்ததில் ஒரே மாதிரியான முடிவுகள் கிடைக்கிறது. இப்போது கிடைத்திருக்கும் கதிரியக்கக் காலக்கணக்கீடுகள் மற்றும் OSL பகுப்பாய்வு காலக்கணக்கீடுகள் அடிப்படையில் கி.மு. 3345 லேயே, தென்னிந்தியாவில் இரும்பு அறிமுகமாகிவிட்டது என்று தெரிய வருகிறது. அதற்கான ஆய்வு முடிவுகள் இதோ.

இந்த பகுப்பாய்வு முடிவுகள், வெளிநாடுகள் மற்றும் இந்தியாவில் இருக்கும் தொல்லியல் அறிஞர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அவர்கள் எல்லோரும் இரும்பின் தோற்றத்தையும் பண்டைய தொழில்நுட்பத்தைப் பற்றியும் ஆய்வு செய்துவரும் அறிஞர்கள். அந்த அறிஞர்கள் எல்லோரும் இந்த அவையில் கூடியிருக்கிறார்கள். இவர்கள் எல்லோரும் ஒருசேர தமிழ்நாடு அரசையும், தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையின் ஆய்வு முன்னெடுப்புகளையும் வெகுவாக பாராட்டியிருக்கிறார்கள்.

இரும்பின் காலம் குறித்த முடிவுகளுக்கு ஆதரவாகவும் – கண்டுபிடிப்புகளை பாராட்டியும் இருக்கிறார்கள். இதுபோன்று பகுப்பாய்வு முடிவுகள் ஆய்வாளர்களுக்கு புதிய உத்வேகத்தை அளித்திருக்கிறது.

அறிஞர்கள் ஆய்வு – பாராட்டு

கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத் தகைசால் பேராசிரியர் 'பத்மஸ்ரீ திலீப் குமார் சக்கரவர்த்தி', ஒன்றிய அரசின் தொல்லியல் துறையில் பணியாற்றி ஓய்வு பெற்றிருக்கும் 'முனைவர் ராகேஷ் திவாரி' உட்பட எல்லா அறிஞர்களும் பகுப்பாய்வு முடிவுகளைப் பாராட்டி தங்களின் கருத்துகளை சொல்கிறார்கள்.

இவை எல்லாவற்றையும் தொகுத்துதான் 'இரும்பின் தொன்மை' என்ற நூல் வெளியிடப்பட்டிருக்கிறது. தேசிய அளவில் தொல்லியலில் வல்லுநராக இருக்கும் ஆய்வாளர்களிடம் பகுப்பாய்வு முடிவுகள் பற்றி கருத்து பெறப்பட்டு, அந்த அறிஞர்களின் கருத்துகளும் இந்த நூலில் இடம்பெற்றிருக்கிறது.

அகழாய்வு செய்யப்பட்ட இடங்களில் இருக்கும் இரும்புப் பொருட்களின் உலோகவியல் பகுப்பாய்வும், இரும்புத்தாது இருக்கும் தொல்லியல் தளங்களில் எதிர்காலத்தில் மேற்கொள்ளவுள்ள அகழாய்வுகளும் இந்தக் கண்டுபிடிப்புகளுக்கு மேலும் வலுசேர்க்கும்; சான்றுகளை வழங்கி தெளிவுபெற வைக்கும். அப்படியான வலுவான சான்றுகளுக்காக நம்பிக்கையோடு நாம் காத்திருப்போம்.

இரும்பை பிரித்தெடுக்கும் தொழில்நுட்பம்

இருந்தாலும், அண்மைக்கால அகழாய்வு முடிவுகள் வாயிலாக தமிழ்நாட்டில் மட்டுமல்ல, இந்திய அளவில் மட்டுமல்ல, உலகளவில் இரும்புத் தாதுவிலிருந்து, இரும்பை பிரித்து எடுக்கும் தொழில்நுட்பம் தமிழ் நிலப்பரப்பில் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது என்று பெருமிதத்தோடு கூறுவோம்.

அதாவது, 5300 ஆண்டுகளுக்கு முன்பு தமிழ் நிலப்பரப்பில் இரும்பு அறிமுகப்படுத்தப்பட்டு இருப்பதை அறிவியல் அடிப்படையில் நிறுவியிருக்கிறோம் என்று மட்டற்ற மகிழ்ச்சியுடன் உலகுக்கு நான் அறிவிக்கிறேன். இது தமிழுக்கும், தமிழினத்துக்கும், தமிழ்நாட்டுக்கும், தமிழ் நிலத்துக்கும் பெருமை! உலக மானுட இனத்துக்கு தமிழ்நிலம் வழங்கும் மாபெரும் கொடை என்றே இதை நாம் கம்பீரமாக சொல்லலாம்.

தமிழ்த்தாயின் தலைமகனான அண்ணாவின் பெயரில் அமைந்திருக்கும் இந்த அறிவுச் சுரங்கத்தில் நடைபெறும் இந்த விழாவின் வழியாக பெருமையுடன் சொல்கிறேன். "பேரறிஞர் அண்ணா அவர்களே! இதோ நமது உயர்வான தமிழ்நாட்டைப் பாருங்கள்!" "அன்று கிண்டல் கேலி பேசியவர்கள் எல்லாம் நம்மை கற்பனாவாதிகள் என்று குற்றம் சொன்னவர்கள் எல்லாம் வாயடைத்து நிற்கிறார்கள் பாருங்கள்" "இலக்கியத்தில் இருப்பதெல்லாம் வரலாறு ஆகாது" என்று சிறுமைப்படுத்தி பேசியவர்கள் எல்லாம் அறிவியல்பூர்வமாக நம்முடைய வரலாற்றை நிரூபணம் செய்வதைக் கண்டு திகைத்து நிற்கிறார்கள் பாருங்கள்!

இந்தியாவின் வரலாறு இனி தமிழ் நிலத்திலிருந்துதான் எழுதப்படவேண்டும் என்று நான் தொடர்ந்து சொல்லிக்கொண்டு வருகிறேன். அதை மெய்ப்பிக்கும் ஆய்வுகளை தமிழ்நாடு தொல்லியல் துறை தொடர்ச்சியாக செய்து வருகிறது. இந்த ஆய்வுகள், பல்வேறு திருப்புமுனைகளையும் உருவாக்கி வருகிறது.

★ தமிழ்நாட்டில் நகர நாகரிகமும் எழுத்தறிவும் கி.மு. 6–ம் நூற்றாண்டே தொடங்கிவிட்டது என்று கீழடி அகழாய்வு முடிவுகள் நிறுவியிருக்கிறது.

★ பொருநை ஆற்றங்கரையில் 3 ஆயிரத்து 200 ஆண்டுகளுக்கு முன்பு வேளாண் பயிர்த் தொழிலில் நெல் பயிரிடப்பட்டிருக்கிறது என்று சிவகளை அகழாய்வு முடிவு வெளிப்படுத்தி இருக்கிறது.

★ இதற்கு முன்பு, தமிழ்நாட்டில் இரும்பின் அறிமுகம் 4 ஆயிரத்து 200 ஆண்டுகளுக்கு முன்பே இருந்ததை கிருஷ்ணகிரி மாவட்டம் மயிலாடும்பாறை அகழாய்வு மூலம் தமிழ்நாடு சட்டமன்றத்தில் நான் உலகுக்கு அறிவித்திருக்கிறேன்.

ஆய்வுகளை தொடர்ந்து செய்யுங்கள்

இத்தகைய அகழாய்வு முடிவுகள் தமிழ்நாட்டு வரலாற்றுக்கு மட்டுமல்லாமல் இந்தியத் துணைக்கண்ட வரலாற்றுக்கே முக்கிய திருப்புமுனையாக திகழ்ந்து வருகிறது. இதுபோன்ற ஆய்வுகளை தொல்லியல் துறை தொடர்ந்து செய்யவேண்டும் என்று துறையின் அமைச்சர் தங்கம் தென்னரசுவையும் – துறை ஆணையரையும் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ், தமிழ் நிலம், தமிழ்நாடு குறித்து நாம் இதுவரை சொல்லி வந்ததெல்லாம் இலக்கியப் புனைவுகள் அல்ல; அரசியலுக்காகச் சொன்னவை அல்ல; எல்லாம் வரலாற்று ஆதாரங்கள். உலக அறிஞர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டவை என்று மெய்ப்பிக்க வேண்டிய கடமையை திராவிட மாடல் அரசு எடுத்துக் கொண்டுள்ளது. ஏற்றுக் கொண்டுள்ளது. தமிழினின் பெருமையை தமிழினத்தின் தொன்மையை உலகம் அங்கீகரித்து ஏற்றுக்கொண்டதை சொல்லும் வரலாற்றுப் பெருமைமிக்க இந்த விழா, நாம் வாழும் காலத்தில், நான் ஆளும் காலத்தில் நடைபெறுவது என் வாழ்நாளில் கிடைத்திருக்கக்கூடிய பெருமை. பெருமையிலும் பெருமை. பெறுதற்கரிய பெருமை.

இந்தப் பெருமையை நம்முடைய குழந்தைகளிடம் நாம் எடுத்துச் சொல்லவேண்டும். இப்படிப்பட்ட பெருமைமிக்க தமிழ்ச்சமூகம், உலகுக்கே வழிகாட்டும் அறிவார்ந்த சமூகமாக வளரவேண்டும் என்று எதிர்காலத்துக்கான திசையை காட்டவேண்டும். பழம்பெருமையை பேசுவது என்பது புது சாதனைகள் படைக்க ஊக்கமாக அமைய வேண்டும். இவ்வாறு பேசினார்.

இவ்விழாவில் அமைச்சர்கள் துரைமுருகன், தங்கம் தென்னரசு, எ.வ.வேலு, மா. சுப்பிரமணியன், பி.கே. சேகர்பாபு, ராஜேந்திரன், சக்கரபாணி, நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், மேயர், துணை மேயர் உள்ளிட்ட உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், தலைமைச் செயலாளர் முருகானந்தம், முதன்மைச் செயலாளர்கள் உதயச்சந்திரன், சந்தர மோகன், கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் திலீப் குமார் சக்ரவர்த்தி, இந்திய தொல்லியல் துறை மேனாள் தலைமை இயக்குநர் ராகேஷ் திவாரி, தொல்லியல் துறை கல்வியியல் மற்றும் ஆய்வு ஆலோசகர் ராஜன், தொல்லியல் துறை வல்லுநர்கள், அரசு உயர் அலுவலர்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

பனிமூட்டம்: டெல்லியில் விமானப் போக்குவரத்து கடும் பாதிப்பு

புதுடெல்லி, ஜன. 23–

டெல்லியில் இன்று காலை அடர் பனிமூட்டம் காரணமாக விமானப் போக்குவரத்து கடுமையாக பாதிக்கப்பட்டது.

டெல்லியில் இன்று காலை 5.30 மணிக்கு குறைந்தபட்ச வெப்பநிலை 12.6 டிகிரி செல்சியஸாக பதிவானதாக இந்திய வானிலை ஆய்வு மைய அறிவித்துள்ளது.

இன்று காலை 8 மணிக்கு காற்றுத் தரக் குறியீடு 262 புள்ளிகளாகப் பதிவாகி மோசமான பிரிவில் இருந்தது. இதனால் விமானப் பயண அட்டவணை பாதிக்கப்பட்டது. இந்திரா காந்தி சர்வதேச விமான நிலையத்தில் பல விமானங்கள் தாமதமாக வந்தது. இதனால் பயணிகள் பெரும் அவதிக்குள்ளானார்கள்.

மகா கும்பமேளா நடைபெற்று வரும் உத்தரப்பிரதேசத்தின் பிரயாக்ராஜில் 12.8 டிகிரி செல்சியஸ் வெப்பநிலை பதிவாகியுள்ளது. இன்று காலை அடர் மூடுபனி நிலவி வரும் நிலையில் திரிவேணி சங்கமத்தில் புனித நீராட லட்சக்கணக்கானோர் குவிந்துள்ளனர்.

மேற்கு வங்கம், சைந்தியா சந்திப்பு ரெயில் நிலையம் மற்றும் வடக்கு 24 பர்கானாக்களின் சில பகுதிகளும் அடர் மூடுபனி சூழ்ந்து காணப்படுகிறது. இதேபோன்று ஒடிசாவின் பூரியின் சில பகுதிகளில் அடர் மூடுபனி சூழ்ந்து குளிர் வாட்டி எடுத்தது.

தமிழ்நாடு அரசின் மசோதாவுக்கு கவர்னர் ஒப்புதல்...

(1–ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழக கவர்னர் ஆர்.என். ரவி ஒப்பதல் வழங்கி உள்ளார். கவர்னரின் ஒப்புதலை அடுத்து இந்த சட்டத் திருத்த மசோதா ஜனாதிபதியின் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப்பட உள்ளது. அவர் ஒப்புதல் அளித்த பிறகு சட்டம் ஆகும். பின்னர் நடைமுறைக்கு வரும். தண்டனை விவரங்கள் என்னென்ன..?

பாலியல் வன்கொடுமை புதிய சட்டத்திருத்த மசோதாவின் தண்டனை விவரங்கள் வருமாறு:–

டிஜிட்டல் முறை, மின்னணு ரீதியான குற்றங்களுக்கு 3 ஆண்டு சிறை தண்டனை, ரூ.10 ஆயிரம் அபராதம் என உள்ளது. இதை, முதல் தண்டனை தீர்ப்பின்பேரில் 5 ஆண்டு சிறை தண்டனை, ரூ.1 லட்சம் அபராதம் என நீட்டிக்கப்படும். 2வது அல்லது தொடர்ச்சியான தண்டனை தீர்ப்பின்போது 10 ஆண்டு சிறை தண்டனை, ரூ.10 லட்சம் அபராதம் விதிக்கப்படும்.

வன்கொடுமையால் ஏற்படும் மரணங்களுக்கு 10 ஆண்டு சிறை தண்டனை, ரூ.50 ஆயிரம் அபராதமும், மரணம் ஏற்படுத்தும் நோக்கத்துடன் செய்யப்படும் வன்கொடுமைகளுக்கு ஆயுள் தண்டனை, ரூ.50 ஆயிரம் அபராதம் என உள்ளது. தற்போது அது முறையே 15 ஆண்டு சிறை தண்டனை, ரூ.2 லட்சம் அபராதம் மற்றும் ஆயுள் தண்டனை அல்லது மரண தண்டனை மற்றும் ரூ.2 லட்சம் அபராதம் என விதிக்கப்படும்.

கல்வி நிலையங்கள், விடுதி, திரையரங்கு, வணிக வளாகங்கள் போன்ற பொது இடங்களில் போதிய மின்விளக்குகள், கண்காணிப்பு கேமராக்கள் பொருத்த வேண்டும். குற்ற சம்பவங்கள் நடந்த 24 மணி நேரத்தில் காவல் நிலையங்களுக்கு தகவல் அளிக்க வேண்டும். புகார் அளிக்காமல் மறைத்தால் விதிக்கப்படும் ரூ.2 ஆயிரம் அபராதம் என்பது ரூ.50 ஆயிரமாக அதிகரிக்கப்படும். அதேபோல, வன்கொடுமைக்கு 14 ஆண்டு கடுங்காவல் முதல் அபராதத்துடன் ஆயுட்கால சிறை தண்டனை. காவல் துறை அலுவலர், சிறைச்சாலை அலுவலர், அரசு அலுவலர், மருத்துவமனை பணியாளர் வன்கொடுமை குற்றவாளியாக இருந்தால் 20 ஆண்டு கடுங்காவல் முதல் ஆயுட்கால சிறை தண்டனை. 12 வயதுக்கு உட்பட்ட சிறுமியை வன்கொடுமை செய்தால் கடுங்காவல் தண்டனை அல்லது மரண தண்டனை. கூட்டு பாலியல் வன்கொடுமை செய்தால் அபராதத்துடன் கடுங்காவல் ஆயுள் தண்டனை. 18 வயதுக்கு உட்பட்ட பெண்ணை கூட்டு பாலியல் வன்கொடுமை செய்தால் கடுங்காவல் ஆயுள் அல்லது மரண தண்டனை. மீண்டும் மீண்டும் குற்ற செயலில் ஈடுபடும் குற்றவாளிகளுக்கு மரண தண்டனை அல்லது கடுங்காவல் ஆயுள் தண்டனை.

பாதிக்கப்பட்ட பெண்ணின் அடையாளத்தை வெளிப்படுத்தினால் அபராதத்துடன் 3 முதல் 5 ஆண்டு வரை சிறை தண்டனை.

பெண்ணின் கண்ணியத்தை அவமதித்தல் அல்லது பலத்தை பயன்படுத்தி தாக்குதல் நடத்தினால் அபராதத்துடன் 3 முதல் 5 ஆண்டு வரை சிறை தண்டனை. பெண்ணை பின்தொடர்ந்தால் அபராதத்துடன் 5 ஆண்டு வரை சிறை தண்டனை. இதே குற்றம் தொடர்ந்தால், அபராதத்துடன் 7 ஆண்டு வரை சிறை தண்டனை. ஆசிட் வீசி கொடுங்காயம் ஏற்படுத்தினால் அபராதத்துடன் கடுங்காவல் ஆயுள் அல்லது மரண தண்டனை. ஆசிட் வீசுவதாக மிரட்டினால் அபராதத்துடன் 10 ஆண்டு முதல் ஆயுட்கால சிறை தண்டனை வரை வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

SHRIRAM FINANCE LIMITED
THIRUVALANGADU BRANCH VEHICLE FOR SALE

S.NO.	VEH.NO.	MAKE	MODEL
1.	TN07CQ9183	EECO 5 STR PETROL 5 SEATER	2018

CT; SATHISH: 9789800811 & RAJESH; 7200337536

பொது அறிவிப்பு

சென்னை–600050, பாடி, சத்தியா நகர், மகாவீர் தெரு, இரண்டாம் தளம், எண்.113/A என்ற முகவரியில் வசித்து வரும். மறைந்த வி.கே.முனுசாமியின் மகன், சுமார் 74 வயதுடைய எம்.சிவநேச செல்வன் எனும் நான், அனைத்து பொது மக்களுக்கும், சம்பந்தப்பட்டவர்களுக்கும் இதன் மூலம் அறிவிப்பது என்னவென்றால், சென்னை–600056 பாடி சத்தியா நகர், மகாவீர் தெரு, முதல் தளம், எண்.113/A, என்ற முகவரியில் வசித்து வரும் என் இளைய மகன் 42 வயதுடைய திரு. எஸ். சதீஷ் குமார், என்பவர் பல்வேறு நபர்களிடம் கடன் பெற்று திருப்பி செலுத்துவதில் தவறிழைத்துள்ளார் என்று தெரிய வருதிறது. இப்போது கடன் கொடுத்தவர்கள் கடனை என் இளைய மகன் திருப்பிச் செலுத்காததால் என்னிடம் வந்து கேள்வி கேட்கிறார்கள். மேற்கூறிய கடன்களுக்கு நான் கடனாளியோ அல்லது உத்தரவாதமளிப்பவரோ அல்ல என்பதால், நான் எந்த வகையிலும் பொறுப்பல்ல என்பதையும். எனவே இந்தக் கடன்கள் என் மீது எந்தவிதமான சட்ட பூர்வ தாக்கத்தையும் ஏற்படுத்தாது என்பதையும் இதன் மூலம் பொதுமக்களுக்கு அறிவிக்கிறேன். மேற்குறிப்பிட்ட எனது இளைய மகனுக்கு மேலும் கடன் கொடுக்க விரும்பும் எந்தவொரு நபரும் தங்கள் சொந்தப் பொறுப்பில் அவ்வாறு செய்த கொள்ளலாம் அதற்கு இருப்பிக் செலுத்துவதற்கு நான் எந்தவிதத்திலும் பொறுப்பாக மாட்டேன் என்பதை இந்த அறிவிப்பின் மூலம் தெரிவித்து கொள்விறேன்.

எம்.சிவநேச செல்வன்
அலைபேசி: 9884401514

பொது அறிவிப்பு

இதனால் பொது மக்களுக்கு தெரிவிப்பது யாதெனில் கூடுவாஞ்சேரி 603202, கன்னிவாக்கம், வெங்கடேஷ்வரா நகர், எண்.13 என்ற முகவரியில் வசிக்கும் லேட் திரு.தாமாதரன் பிள்ளை அவர்களின் மனைவி திருமதி. சுபாஷினி K, லேட் திரு.தாமாதரன் பிள்ளை அவர்களின் மகள் திருமதி. சிந்து சுபாஷ் சந்திரன் மற்றும் லேட் திரு.தாமாதரன் பிள்ளை அவர்களின் மகன் திரு.சிஜி K ஆகிய எனது கட்சிகாரர்களுக்கு சொந்தமான, திருவள்ளூர் மவாட்டம், அம்பத்தூர் வட்டம், சூரப்பட்டு கிராமம், அபிராமி நகர், பழைய சர்வே எண்கள்.216/24, 216/25, 216/32, 216/33, பட்டா எண்.11096, பட்டாப்படி புதிய சர்வே எண். 216/28ல் அடங்கிய மனை எண்.83க்கு விஸ்தீரணம் 1950 சதுரடி மனையும் மற்றும் அதில் கட்டியுள்ள வீடும் உட்பட, மேற்படி முதல் கட்சிகாரரின் கணவரும், 2வது மற்றும் 3வது கட்சிகாரர்களின் தகப்பனாருமான திரு.தாமாதரன் பிள்ளை அவர்கள் 08.06.2011 நாளன்று திரு.சேது ராமலிங்கம் அவர்களிடமிருந்து கிரையம் பெற்று, மேற்படி கிரையப் பத்திரம் அம்பத்தூர் சார் பதிவாளர் அலுவலகத்தில் 2011ஆம் ஆண்டின் 5515/2011ம் எண்ணாக பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த சொத்திற்கு சம்பந்தமான தாய் பத்திரமான அசல் கிரையப் பத்திரம் ஆவண எண். 2203/2008 ஆவணத்தை உயர்நீதிமன்றத்தில் வழக்கறிஞரை சந்திக்க வரும் போது தவற விட்டு விட்டார்கள்.
இந்த அறிவிப்பின் மூலம் தெரியப்படுத்துவது யாதெனில் எனது கட்சிகாரர்களுக்கு சொந்தமான ஆவண எண். 2203/2008 கொண்ட கிரையப் பத்திர அசல் ஆவணத்தை எவர் கண்டெடுத்திருந்தாலோ அல்லது தன் வசம் வைத்து இருந்தாலோ இந்த அறிவிப்பு வந்த 10 நாட்களுக்குள் எனது கட்சிகாரர்களிடமோ அல்லது என் வசமோ ஒப்படைக்கவேண்டியது.

அ.பிரபாகரன்,
அட்வகேட்,
நெம்பர்.5, இந்திரா காந்தி மூன்றாவது தெரு
சூளைமேடு, சென்னை 600 094,
மொபைல்: 9962006885

பொது அறிவிப்பு

சென்னை-600086, கோபாலபுரம், அவ்வை சண்முகம் சாலை(லாய்ட்ஸ் ரோடு), பழைய எண்.187, புதிய எண்.404, என்ற முகவரியில் வசிக்கும் மனு கோயல் த/பெ. அசோக்குமார் கோயல் ஆகிய நான் 13.09.2021-ம் தேதி மதியம் சுமார் 01.40 மணியளவில் எனது மேலாளர் திரு.கணேஷ் என்பவரை எனது அப்பாவுக்கு சொந்தமான நிலம் விஸ்தீரணம் 15 ஏக்கர் 54 செண்டுக்கு 9 ஏக்கர் ஆகும், ஜமீன் சர்வே எண்.310, பட்டாவின் படி ரீ-சர்வே எண்.829/3B, 829/3C, மெட்ராத்தி கிராமத்தில் உள்ளது. கனியூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் 11.07.1995 அன்று பதிவு செய்யப்பட்ட பத்திரம் எண்.968/1995 ஆகும். மேற்படி பத்திரம் நிலம் விற்பனை செய்வது சம்மந்தமாக எனது மேலாளர் திரு.கணேஷ் என்பவரிடம் காசிமேடு மீன்பிடி துறைமுக பகுதியில் உள்ள ஜெயவாணி ஐஸ் பேக்டரியின் உரிமையாளரை சந்திக்க அனுப்பி வைத்தேன். அவரை சந்தித்துவிட்டு எனது மேலாளர் அசல் ஆவணங்களை நகல் எடுப்பதற்காக காசிமேடு மீன்பிடி துறைமுக பகுதியின் அருகில் உள்ள ஜெராக்ஸ் கடைக்கு செல்லும் வழியில் அசல் ஆவணங்களை தொலைத்து விட்டார். மேற்படி அசல் ஆவணங்களை யாரேனும் கண்டெடுப்பவர்கள் கீழ்க்கண்ட முகவரியில் ஒப்படைக்குமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

மனு கோயல்
பழைய எண்.187, புதிய எண்.404,
அவ்வை சண்முகம் சாலை, (லாய்ட்ஸ் ரோடு),
கோபாலபுரம், சென்னை-600086.
செல்: 9840021687
ஆதார் எண்.8478 5606 0382

பொது விளம்பரம் அறிவிப்பு

காஞ்சிபுரம் மாவட்டம், ஆலந்தூர் வட்டம், முகலிவாக்கம், சென்னை –600 125. நெ.1/191, சுபஸ்ரீ நகர் விரிவு 4, முகலிவாக்கம் என்ற விலாசத்தில் வசித்து வருகிறேன்.

என் பெயர்: B. கோவிந்தராஜ் என் மகள் G. அனிதா. வருடம் 2009–ல் பிறந்தார். அவர்களுக்கு பிறந்த தேதி சான்று கேட்டு தாலுக்கா அலுவலகத்தில் பதிவு செய்துள்ளேன்.

அதில் ஆட்சேபணை இருந்தால் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இப்படிக்கு,
B. கோவிந்தராஜ்

ஈசாப் இந்தியா லிமிடெட் ESAB
CIN:L29299TN1987PLC058738
பதிவு அலுவலகம் : பிளாட் எண் 13, 3வது பிரதான சாலை, அம்பத்தூர் தொழிற்பேட்டை, சென்னை- 600 058.
தொ.பேசி எண். 044-4228 1100, இ-மெயில்: investor.relations@esab.co.in

அறிவிப்பு

SEBI (பட்டியல் கடமைகள் மற்றும் வெளிப்படுத்தல் தேவைகள்) விதிமுறைகள், 2015 இன் விதிமுறை 29 உடன் படிக்கப்பட்ட விதிமுறை 47ன்படி, டிசம்பர் 31, 2024 இல் முடிவடைந்த காலாண்டு மற்றும் ஒன்பது மாதங்களுக்கான தணிக்கை செய்யப்படாத நிதி முடிவுகள் மற்றும் இடைக்கால ஈவுத்தொகை ஏதேனும் இருந்தால் அவற்றைப் பரிசீலித்து பதிவு செய்ய பிப்ரவரி 10,2025 திங்கட்கிழமை அன்று காணொளிக்காட்சி முறையில் (VC Mode) நிறுவனத்தின் இயக்குநர்கள் குழுவின் கூட்டம் நடைபெறவுள்ளது.
SEBI (பட்டியலிடுதல் கடமைகள் மற்றும் வெளிப்படுத்தல் தேவைகள்) விதிமுறைகள், 2015 இன் விதிமுறை 42 இன் படி, பங்குதாரர்களின் இடைக்கால ஈவுத்தொகையை ஏதேனும் இருந்தால், அது வழங்குவதற்கான உரிமையை நிர்ணயிப்பதற்கான பதிவு தேதியை நிறுவனம் பின்வருமாறு நிர்ணயித்துள்ளது.

அடையாளம்	பங்கு வகை	பதிவு தேதி	நோக்கம்
NSE: ESABINDIA BSE: 500133	சம பங்கு	20 பிப்ரவரி, 2025	இடைக்கால கட்டணத்திற்காக ஈவுத்தொகை, ஏதேனும் இருந்தால் 2025 மார்ச் 31ஆம் தேதியுடன் முடிவடையும் ஆண்டு

அனைத்து தகவல்களும் நிறுவனத்தின் இணையதளம் www.esabindia.com மற்றும் பங்குச் சந்தையின் BSE Limited www.bseindia.com மற்றும் The National Stock Exchange of India Limited www.nseindia.com ஆகியவற்றில் கிடைக்கும்.

இயக்குனர் குழுவின் சார்பாக
G. பாலாஜி
நிறுவன செயலாளர்
சென்னை
23 ஜனவரி, 2025

படிவம் - A
பொது அறிவிப்பு
(நொடித்தல் மற்றும் இந்திய திவால்நிலை வாரியத்தின் (தாமாக கலைக்கும் நடைமுறைகள்) ஒழுங்குமுறைகள் 2017ன் ஒழுங்குமுறை 14-ன் கீழ்)

**M/s. பார்ச்சூன் ப்ளோராக்ரோ இந்தியா லிமிடெட்டின் பங